# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 27 வியாழக்கிழமை (14-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 276

# ‘தமிழீழம்’ அமையுமானால் மகிழ்ச்சி என்கிறார் கலைஞர்

## ஆனால் அதற்காக தமிழகத்தை வன்முறைக் களமாக்க முடியாதாம்



புதுடில்லி, ஒக்ரோபர் 14

ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு தனித் தமிழீழம் என்ற தீர்வு ஏற்பட்டு, அது அமையுமானால் எம்மை விட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆனால் அதனை எட்டுவதற்காக தமிழகத்தை வன்முறைக் களமாக்குவதை நாம் விரும்பவில்லை; அதை ஏற்கவும் முடியாது.

–இப்படிக் கூறியிருக்கின்றார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதி.

தி. மு. கவும் இடம்பெற்றுள்ள — பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான— தேசிய ஜனநாயக முன்னணி இந்தியப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி வாஜ்பாய் தலைமையிலான அரசு ஆட்சிப் பீடமேறும் சமயத்தில் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியிலேயே கருணாநிதி இப்படிக் கூறியிருக்கின்றார்.

"ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தனி ஈழம் தீர்வாக அமையுமானால் எம்மை விட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது. இது இன்று நேற்று ஏற்பட்ட எமது உணர்வல்ல. நீண்ட காலமாக இந்த உணர்வையே நாம் வெளிப்படுத்தி வருகின்றோம்.

"ஈழத்தை அடைவதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள முறைகளிலேயே எமக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம்.

அத்தோடு அதற்காக இந்தியாவிலே—தாய்த் தமிழகத்திலே — கடந்த காலங்களில் அவர்கள் தேவையில்லாமல் ஏற்படுத்திய வன்முறைகள் மற்றும் அதன் விளைவுகளால் எமக்கும் அவர்களுக்கும இடையில் கருத்து. வேறுபாடுகள் ஏற்பட்டது உண்டு.

"இந்திய மக்களிடம் —

(10ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கி அபகரிப்பு

வலி. வடக்கு, ஒக். 14

வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவரின் கைத்துப்பாக்கி இனந்தெரியாதநபர்களினால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிய வருகின்றது.

வலி தெற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினருமான க, செல்வராசா

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் மாநாடு

வவுனியா, ஒக். 1

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னிப் பகுதிக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கென விசேட மாநாடு ஒன்று இன்று காலை வவுனியாவில் உள்ள வன்னிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சரவை அந்தஸ்துள்ள

# 25 அமைச்சர்களுடன் வாஜ்பாய் பதவி ஏற்பு!

அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான இந்திய மத்திய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது.

பிரதமர் மற்றும் இருபத்தி ஐந்து அமைச்சர்கள், தனி அமைச்சு ஒதுக்கப்பட்ட ஏழு இணை அமைச்சர்கள் மற்றும் முப்பத்தேழு இணை அமைச்சர்கள் என எழுபது அமைச்சர்கள் நேற்று நண்பகல் இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டனர்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்தப் பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

தி. மு. கவைச் சேர்ந்த முரசொலிமாறனும் ரி. ஆர். பாலுவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகப் பதவியேற்றனர். தமிழகத்தைச் சேர்ந்த ரங்கராஜன் குமாரமங்கலமும் (பாரதீய ஜனதா) மீண்டும் அமைச்சரானார்.

ம. தி. மு. கவின் எம். கண்ணப்பனும் பாட்டாளி மக்கள் கட்சியின் என். ரி. சண்முகமும் தனி அமைச்சுஒதுக்கப்பட்ட இணை அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

இது தவிர தமிழகத்தைச் சேர்ந்த ஏ. ராஜா [தி மு க.] ஈ.பொன்னுசாமி [பாட்டாளி மக்கள் கட்சி], செஞ்சி இராமச்சந்திரன் [ம.தி.மு க.] ஆகியோரும் இணை அமைச்சர்

[10 ஆம் பக்கம் பார்க்க)

### அ’ புர கிராமவாசிகள் மீது தாக்கு:

# இராணுவ அதிகாரி மற்றும் 19 சிப்பாய்கள் கைது!

மட்டக்களப்பு, ஒக். 14

அனுராதபுரம் மாவட்டம் — நொச்சியாகம கிராமவாசிகள்மீது நேற்றுக் காலை தாக்குதல் மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 20 இராணுவச் சிப்பாய்களை அனுராதபுரம் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

நொச்சியாகம பகுதியில் உள்ள அமுனுபொலர. ஒலுவா கிராமவாசிகளுக்கு இடையில் நீண்ட காலமாகப் பிணக்கு நிலவி வந்ததெனவும் —

நேற்றுக் காலை ஒலுவாப் பகுதியைச் சேர்ந்த இரண்டு இராணுவச்சிப்பாய்கள் தமது சக சிப்பாய்களுடன் இணைந்து அமுனுபொலர கிராமத்துக்குள் நுழைந்து கிராமவாசிகள் மீது தாக்குதல் நடத்தினர் எனவும் —

இதில் கிராமவாசிகள் இருவர் படுகாயமடைந்தனர் என

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் ஒருவரின் சடலம் நெடுந்தீவில் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், ஒக். 14

நெடுந்தீவுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்று கரைஒதுங்கியது.

இந்தச் சடலத்தில் மூன்று இடங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மண்டைதீவுக் கரையில் நேற்று முன்தினம் மூன்று ஆண்களின் சடலங்கள் கரையொதுங்கியது தெரிந்ததே.

### பூந்தோட்டத்தில் தேடுதல்

வவுனியா, ஒக். 14

வவுனியா — பூந்தோட்டம் பகுதியில் படையினர் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் திடீர் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

தேடுதலில் ஈடுபட்ட படையினரில் அனேகமானோர் சிவில் உடையில் காணப்பட்டனர் எனவும்—

தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் முகமூடி தரித்த தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7)

### வேட்டுக்களால் வவுனியாவில் பதற்றம்!

வவுனியா, ஒக். 14

வவுனியா ஜோசப் படைத்தளம் அமைந்துள்ள பகுதியில் நேற்று நண்பகல் 12.00 மணி முதல் சுமார் அரை மணி நேரம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து வவுனியா நகரப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் ராணுவச் சதி: உலக நாடுகள் கண்டனம்

லண்டன், ஒக். 14

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி மூலம் ஜனநாயக அரசு கவிழ்க்கப்பட்ட செயலைச் சர்வதேச நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, ஜப்பான் போன்ற நாடுகளே முதலில் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

ஜனநாயக ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செயல் இது என அவை வர்

(10ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு திமோர் தலைவருக்கு புலிச் சின்னப் பதக்கம்

### ஆஸி தமிழர் அணிவிப்பு

திமோர், ஒக். 14

கிழக்குத் திமோர் விடுதலை இயக்கத்தலைவர் ஜோஸ் அலெக்சாந்தர் ஸனானா குஸ்மாஓ ஆஸ்திரேலியா வாழ் ஈழத்தமிழ் மக்களால் நேற்று முன்தினம் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தோனேசிய ஆட்சிக்கு எதிராகப் போராடி கிழக்குத் திமோர் மக்களின் சுதந்திரத்துக்காக அயராது உழைத்த குஸ்மாஓ நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த சமயம் "தமிழீழமும் புலிச்சின்னமும்" பொறிக்கப்பட்ட பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார் என மேலும் தெரிவிக்கப்பட்டது

[உ-7]

### நாடு முழுவதிலும்

# லக்ஸபான மின் விநியோகம் 20 நிமிடங்கள் தடைப்பட்டது!

கொழும்பு, ஒக். 14

நாடு முழுவதற்குமான நீர் மின் விநியோகம் நேற்று மாலை 6-45 மணி முதல் சுமார் 20 நிமிடங்களுக்குத் தடைப்பட்டது. இதனால் கொழும்பு மற்றும் தெற்கின் முக்கிய நகரங்களில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

பிரதான மின் கட்டுப்பாட்டு நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த மின் தடை ஏற்பட்டது என்று மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் மின் விநியோகப் பிரதான தளங்களில் இடம்பெற்ற வன்செயல் காரணமாகவே இந்த மின் தடை ஏற்பட்டது என்ற வதந்தி தெற்கில் பரவியது.

அந்த வதந்திகளில் எந்த உண்மையும் இல்லை என பொலீஸ் அவசர சேவைகள் பிரிவு தெரிவித்தது.

20 நிமிடங்களின் பின்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# போலியோ சொட்டு மருந்து இரண்டாம் சுற்று சனியன்று

யாழ்ப்பாணம், ஒக். 14

இரண்டாவது சுற்றுப் போலியோ சொட்டு மருந்து இம்மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை வழங்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். சுகாதார சேவைகள் பதில் பிரதி மாகாணப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது —

சிறுவர்களை முடமாக்கியும் கொன்றும் வந்த போலியோ என்னும் கொடிய நோயை உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நோக்கத்தோடு உலகளாவிய ரீதியில் தேசிய எதிர்சக்தி அளிக்கும் தினங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இலங்கையில் 1995 ஆம் ஆண்டு முதல் இந்த விசேட மருந்து கொடுக்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.

இவ்வருடம் செப்ரெம்பர் 11 ஆம் திகதி முதலாவது சுற்று வழங்கப்பட்டது. ஒக்ரோபர் 16 ஆம் திகதி 2ஆவது சுற்று போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படவுள்ளது.

சகல பத்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கும் இத்தினத்தில் தடை மருந்து கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு போலியோ சொட்டு மருந்து பூரணமாகக் கொடுக்கப்பட்டவர்கள், கொடுக்கப்படாதவர்கள் என்ற பேதமின்றி மேலதிகமாக இத்தினத்திலும் தடை மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

★ வைத்திய சாலையில் உள்ள பிள்ளைகளுக்கும் இம்மருந்து கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது,

★ மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு மேலதிக நிலையங்கள் எல்லாப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

★ அன்றைய தினம் தமது பகுதியிலிருந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளவர்கள் அவ்வப்பகுதியில் இம் மருந்தைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது

★ தேசிய தடை மருந்து கொடுக்கும் திட்டத்துக்கு உலக சுகாதார நிறுவனம், யுனிசெவ் நிறுவனம், சர்வதேச றோட்டரிக் கழகம். சர்வதேச அரிமாக் கழகம் ஆகியவை உதவி வருகின்றன.

மேலதிக விவரங்களை அவ்வப்பகுதி சுகாதார ஊழியர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (இ)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஒக். 14

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் தரம் II இல் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'சீடர்' திட்டக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். (க-152)

## வடக்கு . கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு

குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான

**திறந்த போட்டிப் பரீட்சை - 1999**

11—10—1999 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தில் 29-10-1999 எனக் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவு திகதி 15-11-1999 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ச. பரமேஸ்வரன்
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு — கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி/9341)

## நன்றி கூறுகின்றோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் (ஈ. பி. டி. பி.) பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து சாவற்கட்டு அந்திக்குளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்துக்குப் பெறுமதி வாய்ந்த ஒலிபெருக்கி சாதனப் பொருள்களை வழங்கியதற்கும் மிக விரைவாக வழங்க உதவி புரிந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும்

யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர்

**திரு. வி. கே. ஜெகன்** அவர்களுக்கும்

சாவற்கட்டு கிராம மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் ஆலய தொண்டர்களும் தர்மகர்த்தா சபையினரும் மிகப் பெரும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

— செயலாளர்

அந்திக்குளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்,
சாவற்கட்டு ஆனைக்கோட்டை, (69933)

## வேலை வெற்றிடம்

யாழ். நகரின் மத்தியில் இயங்கும் பிரபல்யமான வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு தகுதி வாய்ந்த

பெண்

**கணக்கு இலிகிதர்**

தேவை.

தகுதி, அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:

**விளம்பர இல. 956,
மே / பா உதயன்,
யாழ்ப்பாணம்.**

(சி/9349)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா கனகலிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி சங்கானையில் வசித்தவருமாகிய சுப்பையா கனகலிங்கம் சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயராணியின் அன்புக் கணவரும் துளசி, ரேனுசா ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி புஸ்பராணியின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15-10-99 வெள்ளிக்கிழமை சுவிஸில் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
திருமதி சு. புஸ்பராணி
(மாமி)

காளிகோயிலடி,
சங்கானை.
சுவிஸ் தொலைபேசி இல. 0041-21-6241872

(69942)

### சண்முகம் வெற்றிவேல்

(பலசரக்குக் கடை உரிமையாளர்)

தெல்லிப்பழை 8 ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் வெற்றிவேல் 12-10-99 அன்று இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகம்-பூதாத்தை தம்பதிகளின் அருந்தவப் புதல்வனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தகுட்டி-தெய்வானை தம்பதிகளின் மருமகனும் கெங்காதேவி (ஜேர்மனி), குகன் (ஜேர்மனி), கெங்காதரன் (மாணவன், மகாஜனாக்கல்லூரி) ஆகியோரின் அன்பு தந்தையும் ஜெயரட்ணத்தின் மாமனாரும் கோபி, றோபி, சுஜிபன் ஆகியோரின் அன்புப் பேரனும் வள்ளியம்மை, கிருஷ்ணர், தில்லையம்பலம், திலகவதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் கந்தசாமி, புவனேஸ்வரி, நாகராணி, சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (13-10-99) புதன்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் இந்தியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கெங்காதரன்
(மகன்)
(மாணவன், மகாஜனாக்கல்லூரி)

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

(69928)

### திருமதி மனோன்மணி முருகேசு

அல்வாய் மேற்கு (திக்கம்) பிறவளவைச் சேர்ந்தவரும் தற்போது ஆண்டா வளவு கொற்றாவத்தையில் வசித்து வந்தவருமான திருமதி மனோன்மணி முருகேசு நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் காலமானார்.

அன்னார் தம்பையா முருகேசு [ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், சீனன் குடா, திருகோணமலை] அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருச்செல்வராசா, கமலாதேவி, ஸ்ரீஸ்கந்தராசா [இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை], வரதராஜா, அற்புதராஜா [சாயி கொமினிகேசன், இலக்கணாவத்தை, உடுப்பிட்டி], ஆனந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் தணிகாசலராஜா, தங்கரத்தினம், சாந்தகுமாரி, புஷ்பவதி, சொர்ணகாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சூரியபிரகாஷ், தர்ஷிகா, தனுஷிகா, நிசாந்தி, தர்ணா, நிரோஜன், சுலக்ஷன், பிரசன்யா, பிரஷாத், சிந்துஜா, அருந்தனா, நிஷாந்த், தர்மிகன், அட்சரன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற செல்வி சௌந்தராம்பிகை மற்றும் பூபதி அம்மா, நவமணி, நேசமலர், காலஞ்சென்ற அரியகுணராஜா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து, செல்வநயினார் மற்றும்வேலுப்பிள்ளை, சட்டநாதர், குலமணிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14-10-99) வியாழக்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. முருகேசு
(கணவர்)

ஆண்டா வளவு,
கொற்றாவத்தை.

[சி/9348]

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமையாற்றிய

**கந்தையா சிவகுமார் (சிவா)**

அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களையும் தெரிவிக்கின்றேன்.

த. குவேந்திரராசா, வர்த்தக நிறுவனம்
157/A கே. கே. எஸ். வீதி,
சத்திரத்துச் சந்தி, யாழ்ப்பாணம். (69947)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இரண்டாம் வருட ஆரம்பக் கல்வி நெறியைச் சேர்ந்த

திரு. க. ச. சசீசராஜ் அவர்களின் அன்புத் தந்தையாரான

**குமாரசாமி கலைக் சண்முகநாதன்**

அவர்கள் கிளிநொச்சியில் காலமாகிய செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கலாசாலை சமூகம்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

[69937]

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்

திரு. க. பீதாம்பரம்

அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சாந்தநாயகி பீதாம்பரம்**

அவர்களின் மறைவையிட்டு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்
வலி. வடக்கு, தெல்லிப்பழை.

(69930)


## ராஜா
யாழ்ப்பாணம்

கடைசி வாரமாக
அர்ஜுன் — குஷ்பு
மற்றும் பலர் நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
10-30, 2-30

20 ஆம் திகதி முதல்
மேட்டுக்குடி
(சி/9168)

## நாகம்ஸ்
ஊன்வாகம்

விஜய் -சங்கவி-சுவாதி
ரகுவரன்
நடித்த
செல்வா
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
(69834)

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.

விஜயசாந்தியின்
பாரதரத்னா
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
(69879)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் குடிமக்கள் அடங்கிய காபந்து அரசு

## இராணுவத் தளபதி நடவடிக்கை

உலக அரங்கில்

இஸ்லாமாபாத், ஒக். 14

பாகிஸ்தானில் இராணுவச் சதிப்புரட்சி மூலம் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சியை கவிழ்க்கக் காரணமாகவிருந்த இராணுவத் தளபதி ஜெனரல் முஸ்ராப் பொது மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக காபந்து அரசு ஒன்றை அமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் ஆட்சியைக் கலைத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய அவர் அடுத்து தான் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை.

இராணுவத் தளபதியிடம் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்துத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் —

பொதுமக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான காபந்து அரசு ஒன்றை உருவாக்க அவர் முயற்சி எடுத்துள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன என்றும் — பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

இராணுவத் தளபதியின் அடுத்த கட்ட செயற்பாடு குறித்து எந்த நேரத்திலும் தகவல்கள் வெளியாகலாம் என எதிர்பார்ப்பதாக மற்றொரு செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

இதற்கிடையில்— இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ள தளபதி ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் யாவற்றுக்கும் தடை விதித்துள்ளார்.

அதே சமயம் பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சிக் கவிழ்ப்பை தாம் ஆதரிக்கவில்லை என்றும்—

அங்கு சிவில் ஆட்சியை மீண்டும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்படி தாம் இராணுவத் தளபதியிடம் கோரியுள்ளதாகவும்—பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர்பூட்டோ தெரிவித்துள்ளார்.

(இ-3)

# ஆட்சிக் கவிழ்ப்பைவிட வழி இல்லை என்கிறார் பாக். இராணுவத் தளபதி

இஸ்லாமாபாத், ஒக். 14

''நாட்டின் நிலை குலைவதைத் தவிர்க்கவே அரசாங்கத்தைக் கவிழ்த்தோம்'' என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் முஸ்ரால் தெரிவித்துள்ளார்

இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கவிழ்த்த பின்னர் தொலைக்காட்சியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

ஆட்சியைக் கவிழ்த்ததன் மூலம் பாகிஸ்தானில் நிலவிய நிச்சயமற்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கொந்தளிப்பு நிலையைத் தவிர்க்க படையினர் வேறு வழியின்றித் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்சமயம் அமைதி நிலவுகின்றது. மக்கள் எதுவித அச்சமும் இன்றி வாழலாம்— என்றார் அவர்.

(இ-3)

## இந்திய - பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்படும் ஆபத்து

புதுடில்லி, ஒக். 14

பாகிஸ்தானில் உருவாகியுள்ள இராணுவ ஆட்சி மூலம் இந்திய - பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்படும் என பி. பி. ஸி. தெரிவித்தது.

காஷ்மீர் பிரச்சினை உட்பட மற்றும் பல பிரச்சினைகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க இருந்த நேரத்தில் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளது என்றும் —

இதன் காரணமாக இந்தப் பேச்சுக்கள் நடைபெற வாய்ப்பு இல்லை என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் கூறப்பட்டது.

(இ-3)

## பாக். நிலைமையை அமெ. அவதானிக்கிறது

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா அவதானமாகவே நடவடிக்கை எடுக்கும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இந்த விடயத்தை மிக உன்னிப்பாகக் கவனிப்பதாகவும்—

ஜனநாயக முறையில் பாகிஸ்தானில் ஆட்சி நடைபெற வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கம் என்றும்—

அதற்காக அமெரிக்காவின் அணுகுமுறை மெதுவாக இடம்பெறும் என்றும்—அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு ஜனநாயக அரசு ஒன்று உருவாகும் என்பதில் அமெரிக்காவுக்கு நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

## தலிபான் படையினரின் ஆயுதக் களஞ்சியத்தில் பெரும் வெடி விபத்து

காபூல். ஒக். 14

ஆப்கானிஸ்தானின் வட பகுதி நகரான மஷாரி ஷெரிப்புக்கு அருகே தலிபான் படையினரின் ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்துக் காரணமாக 7 தலிபான் படையினர் உயிரிழந்தனர். மேலும் 12 பேர் காயமடைந்தனர்.

தலாயி றெயினிஸ் வெஷ என்ற இடத்தில் அமைந்திருந்த ஆயுதக் களஞ்சியத்திலேயே விபத்து இடம் பெற்றது.

களஞ்சியத்தில் இருந்து வெடிப் பொருள்களை வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டிருந்த போது அதில் இருந்த குண்டு ஒன்று வெடித்ததை அடுத்து இந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வாகனத்தில் இருந்தகுண்டுகள் வெடித்ததை அடுத்து களஞ்சியத்தில் இருந்த வெடிப் பொருள்களும் வெடி மருந்துகளும் தொடர்ச்சியாக சில நிமிடங்களுக்கு பெரும் சத்தத்துடன் வெடித்ததாக மக்கள் தெரிவித்தனர்.

எனினும் அந்தக் களஞ்சியம் தலிபான் படையினரின் விநியோகப் பாதையில் அமைந்துள்ள சிறிய களஞ்சியம் என்பதால் பெரும் சேதம் ஏற்படவில்லை என தலிபான் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் எதிரணிப் படைகள் வசம் இருந்து மஷாரி ஷெரிப் நகரைக் கைப்பற்றிய பின் தலிபான் படையினர் இந்த ஆயுதக் களஞ்சியத்தை அங்கு அமைத்திருந்தனர்.

(இ-6)

## கொசோவோவில் ஐ. நா. அதிகாரி சுட்டுக்கொலை

பிரிஸ்டினா, ஒக். 14

கொசோவோவில் சமாதானப் பணியில் ஈடுபட்டு வந்த ஐ. நா. சமாதானப்படை அங்கத்தவர் ஒருவர் தலைநகர் பிரிஸ்டினாவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

கடந்த ஜூன் மாதம்முதல் அங்கு ஐ. நா. சமாதானப் படை செயற்பட்ட போதும் சுட்டுக் கொல்லப்பட்ட முதலாவது ஐ. நா. உறுப்பினர் இவராவார்.

(இ-3)

## அல்பேனிய பிரதமர் பதவிதுறப்பு

டிரானா, ஒக். 14

அல்பேனியாவில் ஆளும் சோஷலிஸ்ட் கட்சித் தலைமைத்துவத்துக்காக அந்தக் கட்சியில் இடம்பெற்ற போட்டி காரணமாக அந்த நாட்டின் பிரதமர் பண்டெலி மஜகோ தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்,

கட்சி மாநாட்டில் இடம் பெற்ற வாக்களிப்பில் மஜ்கோ தோல்வியடைந்ததை அடுத்து அவர் பதவியை ராஜினாமாச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[இ-3]

## வீதிகளில் இறங்கி பொதுமக்கள் குதூகலம்

பாகிஸ்தானில் இராணுவச் சதிப்புரட்சி மூலம் அரசு கவிழ்க்கப்பட்டதை அடுத்து பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிரான பொதுமக்கள் வீதிகளில் இறங்கி குதூகலம் கொண்டாடினர்.

பொதுமக்கள் இனிப்புப் பண்டங்களைப் பரிமாறியும் கோஷங்களை எழுப்பியும் குதூகலமாகக் கொண்டாடியதாக தெரிவிக்கப்பட்டது.

சில மாநிலங்களில் அசம்பாவித சம்பவங்கள் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்ட போதும் அதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை. [இ-3]

## வழமை நிலை ஸ்தம்பிதம்

இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பாகிஸ்தானில் சகல துறைகளும் நேற்று ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுக்கிடந்தன; சகல விமான நிலையங்களும் படையினர் வசம் இருந்ததால் வெளியிடங்களுக்கான சகல விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

அரச அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டுக்கிடந்தன. மக்களின் அன்றாட வாழ்க்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

(இ-3)

## காணாமற்போன யாழ். மாணவி கனடாவில் எலும்புக்கூடாக மீட்பு

கனடாவில் கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு சென்ற சமயம் காணாமற்போன யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவரின் எலும்புக் கூடு நேற்று முன்தினம் அங்கு மீட்கப்பட்டுள்ளது.

சர்மினி ஆனந்தவேல் என்ற இந்த மாணவி நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக வீட்டில் இருந்து புறப்பட்டவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே,

பிரஸ்தாப மாணவியின் வீட்டில் இருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள பற்றைக்காட்டுக்கு சமீபமாக மண்டை ஒட்டின் பகுதி ஒன்று நேற்றுமுன்தினம் காணப்பட்டது என்றும் —

அந்த விடயம் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் பொலீஸார் தேடுதல் நடத்தினர் என்றும் —

அதன்பின்னர் எலும்புக்கூடு ஒன்றைக் கைப்பற்றினர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போன மாணவியின் பெற்றோரின் இரத்தம் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மரபணுப்பரிசோதனையின் போது அந்த எலும்புக்கூடு பிரஸ்தாப மாணவியினது என உறுதி செய்யப்பட்டுள்ளது. [இ-3]

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்வம் நாகநாத முதலி றொஷான்

அன்னையின் மடியில் 10 — 07 — 1993

ஆண்டவன் அடியில் 14 — 10 — 1998

ஆடியோடி விளையாடி
கோடியின்பம் தந்தவனே!
கிள்ளை மொழி பேசி
துள்ளித் திரிந்த 'றொஷான்' நீ
எம் கண்ணிமைகளை மூடிவிட்டு
எங்கு ஓடி மறைந்தாய்?
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது இத்துயரம்.

உன் நினைவில் நித்தமும் வாடும்
பாசமிகு அம்மா, அப்பா,
அண்ணா, தங்கை, தம்பி,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(69932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சுதுமலை தெற்கு ஆனைக் கோட்டை என்ற முகவரி யுடைய திருமதி யோகேஸ்வரி இராசரெத்தினம் என்பவரது விசேட அடையாள அட்டை சுதுமலை மத்திய சனசமூக நிலையப் பகுதியில் 11-9-99 தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து மேற் படி விலாசத்தில் அல்லது அம்பாள் சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை என்ற முக வரியில் ஒப்படைத்துதவவும்.
(69904)

பாரதி வீதி, கோண்டாவில் வடமேற்கைச் சேர்ந்த சிவ ராஜா கதீபன் என்பவரது விசேட அ. அட்டையும், தேசிய அ. அட்டையும் 10-10-99 ஞாயிற்றுக்கிழமை அன்று இணுவிலுக்கும் மல் லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் மேற்கூறிய முகவரி யில் ஒப்படைத்து உதவவும்.
(69924)

### காணவில்லை

சிவப்பு நிறம், நெற்றியில் சிறிய வெள்ளைப் புள்ளி உடைய பசுமாடு 4-10-99 தொடக்கம் காணவில்லை. இதைக் கண்டவர்கள் கீழ் வரும் முகவரியுடன்தொடர்பு கொள்ளவும்: திருமதி த. சொர்ணகாந்தி 539, கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம்.
(69922)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகள் SISIL 60, 80 (Double Door) மிருதங்கம் 20'' 22'' 24'' வயலின் மெலோடிக்கா ஆர் மோனியம் (Single). கிற்றார் Organ, Fan (Table Fan) மற்றும் National Television AC (Black & white 18'') என்பன விற்ப னைக்குண்டு தொடர்பு: ப. தேவகுமார் (தேவு) மாவ டிச்சந்தி மூளாய் வீதி, வட் டுக்கோட்டை.
(69912)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன்
க. பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தந்தையாரான
**சுப்பிரமணியம் கந்தசாமி**

வன்னியில் காலமானார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவையிட்டு பிரிவினால் துபருறும்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

15 ஆம் அணி மாணவர்கள்,
யாழ். மருத்துவபீடம்.
(69935)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1946-07-16 — இறப்பு 1985-09-17

**அமரர் சின்னப்பு குணசிங்கம்**

உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வோடு எம்முடன் வாழும் அன்புத்தெய்வமே!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து பதினான்கு
ஆண்டுகள் சென்றிடினும் உங்கள்
நினைவுகள் எம்மனதை விட்டு நீங்காது.

பிரிவின் துயருடன் நினைவு கூரும்
மனைவி. பிள்ளைகள்.

3 ஆம் கட்டை,
சிங்கராயர் வளவு,
கல்வியங்காடு.
(69921)

# வலயக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் வலயக்கல்வித் திணைக்களத்தின் கேள்விச்சபைத் தலைவரால் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலைப் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/ நல்லூர் ஸ்தான சி. சீ. த. க. பா. விவசாய அறை, நாற்றுக்கூட அறை அமைத்தல். | 250/- | 5,000/- |
| | யா/ நல்லூர் ஸ்தான சி. சீ த. க. பா. செயற்பாட்டறை அமைத்தல். | 500/- | 5,000/- |
| 02. | யா/ யாழ். மத்திய கல்லூரி | | |
| | அ. கட்டம் 1 90 ' * 25 ' அமைத்தல். | 500/- | 18,000/- |
| | ஆ. கட்டம் 1 50 ' * 25 ' அமைத்தல். | 500/- | 7,500/- |
| 03. | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | | |
| | அ. கட்டம் 1 90 ' * 25 ' அமைத்தல். | 500/- | 18,000/- |
| | ஆ. கட்டம் 1 50 ' * 25 ' அமைத்தல். | 500/- | 7,500/- |

குறிப்பு: யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி கேள்விக்கான மீளளிக்கப்படும். மீளளிக் கப்படாத வைப்புப்பணம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் தென்மராட்சி வலயத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் [ஐசிரிஎடி] நிறுவனத்தின் தரம் 9ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவைகள் வரி [ஜீ. எஸ். ரி.] சேர்க்கப் பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவைகள் வரி [ஜீ. எஸ். ரி.] சேர்க்கப் படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண் டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை யாழ்ப்பா ணம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 14 ஆம் திகதியிலிருந்து 19—10—1999 ஆம் திகதி நண்பகல் 11.00 மணிவரை கல்வித் திணைக்கள பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை பொறி யியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடது புற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிற்போட்டு இடப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர்'' கேள்விச்சபை வலய/கல்வித் திணைக்களம் செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு மேற்படி திணைக்களத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலகஅறையினுள் வைக்கப் பட்டுள்ள கேள்விப்பத்திரப்பெட்டியில் 1999ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி முற்பகல் 10 00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் 1999 — 12 — 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங் களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற் றுக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

திருமதி எஸ். மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலயம்.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
வலயக் கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
12—10—1999
(வ/9320)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## சித்தமருத்துவ சத்திரசிகிச்சை மாணி (BSMS) புதிய அனுமதி 1998/99

மேற்படி பட்டப்படிப் பிற்கான கற்கை நெறிக்கு புதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கற்கை நெறிக் காலம்: 5 வருடங்கள்**

**விண்ணப்ப முடிவு திகதி: 29-10-1999**

**அனுமதிக்கான நிபந்தனைகள்:**

மேற்படி கற்கைநெறிக்கு 1997/1998 ஆகிய ஆண்டு களில் க. பொ. த. (உயர் தர) தேர்வுகளில் ஆகக் குறைந்த கல்வித் தகுதி களைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

**அனுமதிக்கு வேண்டிய ஆகக் குறைந்த தகைமை:**

ஒரு விண்ணப்பதாரி:

I. அ) 1997/98 ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல், விலங் கியல், இரசாயன வியல், பௌதிகவி யல் ஆகிய நான்கு பாடங்களிலும் சித் தியடைந்திருப்ப துடன்,

அல்லது

ஆ) 1997/98 ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல், விலங் கியல், இரசாயன வியல் ஆகிய 3 பாடங்களில் சித்தி யுடன் பௌதிக வியலில் 25%-ற்கு குறையாத புள்ளி களைப் பெற்று,

II. நான்கு பாடங் களுக்குமாக 180 புள்ளிகளைப் பெற் றிருந்ததுடன் பல் கலைக்கழக அனு மதிக்குத் தகுதியும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமை யாத, பூரணப்படுத்தப் படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் கிடைக் கப் பெறாத விண்ணப்பங் கள் யாவும் நிராகரிக்கப் படும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத் திலோ, யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளை யிலோ, ரூபா 50 ஐ செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக் கட்டளை யுடன் முத்திரை ஒட்டப் பட்ட சுயவிலாசமிடப் பட்ட 20X10 செ. மீ அள வுள்ள கடித உறையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக களஞ்சியம் 154, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு 13, தொலை பேசி இலக்கம் 435620 என்னும் முகவரிக்கு அல் லது பிரதிப் பதிவாளர், பரீட்சைகளும் அனுமதி களும் கிளை யாழ். பல் கலைக்கழகம், யாழ்ப் பாணம் என்னும் முகவ ரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 23X10 செ. மீ. அளவு கொண்ட கடித உறையில் இடதுபக்க மூலையில் சித்தமருத்துவக் கற்கைநெறிக்கான விண் ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல் லது நேரில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித் தோர் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

விண்ணப்பம் அனுப்ப/ ஒப்படைக்க வேண்டிய முக வரி.

பிரதிப்பதிவாளர்,
பரீட்சைகளும்,
அனுமதிகளும்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

— பதிவாளர்
12-10-1999
(சி/9327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி இன்றிச் சாராயம் எடுத்துச் சென்றவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 14

அனுமதிப்பத்திரம் இன்றி தீவுப்பகுதிக்குச் சாராயம் எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் நபர் ஒருவர் தீவகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

முதலாம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டவராவார்.

அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி 20 போத்தல் சாராயத்தை யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு எடுத்துச்செல்லும்போது இவர் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு சந்தேக நபருக்கு உத்தரவிட்ட நீதிவான் இவரை 5 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில்செல்ல அனுமதித்தார்.

(இ-9)

# உள்ளூராட்சி நூலகர் பதவி; போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு

திருகோணமலை, ஒக். 14

வடக்கு —கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட திணைக்களங்களில் நூலகர் பதவி தரம் IIIக்கு ஆள்களை நியமிப்பதற்காக நடத்தப்படவுள்ள போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை மகாண பொதுச்சேவை ஆணைக்குழு கோரியுள்ளது,

தற்சமயம் சேவையில் உள்ள உள்ளூராட்சி நூலக உதவியாளர்கள், பொறுப்பாளர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தப்பதவிக்கு திறமை அடிப்படையில் 25 சத வீதமானவர்களை நியமிக்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்அனுமதி வழங்கியுள்ளார் என்றும்—

அதற்கு ஏற்ப நடத்தப்படவுள்ள போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது. என்றும் — மேலும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

ஜி சீ ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தும், 5 வருடகாலச் சேவையைப் பூர்த்தி செய்தும் பணி புரிபவர்களின் விண்ணப்பங்களைப் பெற்றுத் தமக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் க. பரமேஸ்வரன் உள்ளூராட்சி ஆணையாளர்களைக் கேட்டுள்ளார்.

(இ-3)


## WANTED

**Mine Action Pilot Project**

**JRRP / UNDP**

**10 Medics**

Qualification:

Fully qualified Registered Medical Practitioner or fully qualified nurse.

Please send in your curriculum vitae to reach the office on or before the 18 th October.

- MINE ACTION COORDINATOR
125, Temple Road,
Jaffna.

(69923)


# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய அணுகுமுறையைகடைப்பிடிக்குக

## வாஜ்பாயிடம் ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

''இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளுக்கு ஏற்ற தீர்வு கிடைக்க இந்தியாவில் பதவி ஏற்கவிருக்கும் அரசுபுதிப்ய அணுகு முறையைக் கடை' பிடிக்க வேண்டும்'

மேற்கண்டவாறு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் கோரியுள்ளது.

அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வாஜ்பாய்க்குகடந்த வாரம் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தங்களின் வெற்றியைக் கேள்விப்பட்டு இலங்கைத் தமிழ் மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். 21 ஆம் நூற்றாண்டில் இந்தியாவைத் தலைமை வகித்துச் செல்ல இந்திய மக்கள் தங்களுக்கு ஆணை தந்துள்ளார்கள்.

இலங்கையில் இன்னற்படும் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ற தீர்வு ஒன்று, தங்கள் அரசு எடுக்கும் புதிய அணுகுமுறை மூலம் கிடைக்கலாம் என்று நம்புகிறோம்.

இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் உள்ள சூழ்நிலை உருவாக தங்கள் பங்களிப்பை அளிப்பீர்கள் என நம்புகிறோம் — என்றுள்ளது. (இ-க-3)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெள்ளிவிழா விளையாட்டு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு

எதிர்வரும் சனிக்கிழமை ஒக்ரோபர் 16 ஆம் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கு. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி நிகழ்வில் வெற்றி பெற்றோருக்கு தங்கப் பதக்கங்கள், வெள்ளிப் பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கப்படஉள்ளன. வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகள் இந்நிகழ்வில் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர் யாழ். பல்கலைக் கழகம்) அவர்கள் கலந்து கொள்வார்.

வெள்ளிவிழா
விளையாட்டுக்குழு

(சி/9329)


## மீன் வளர்ப்புத் திட்டம்

கடற்றொழில் திணைக்களத்தினால் பளைப் பிரதேசத்தில் உள்ள மூன்று இடங்களில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளாலி, கரந்தாய், தர்மக்கேணி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.

இங்குள்ள குளங்களை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அண்மையில் பார்வையிட்டுச் சென்றனர்.

(இ-117)


சர்வதேச அரிமாக் கழகம்

INTERNATIONAL LIONS CLUB

## உலக பார்வை தினம்
## WORLD SIGHT DAY
**14 - 10 - 1999**

மீளப் பெறக்கூடிய, குணமாக்கக் கூடிய கண் நோய்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

Avoid Curable and Reversable Eye Diseases.

District Chairman,
Sight First
Dist. 306 B.

[சி/9307]



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## விதுஜா சுதானந்தன்
**14 - 10 - 1999**

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த
சுதானந்தன்
உடுவில் கிழக்கைச் சேர்ந்த
டிலோஜினி
தம்பதியினரின்
செல்வப் புதல்வி விதுஜா

தனது முதலாவது பிறந்த நாளை இன்று கனடாவில் உள்ள Scorborough நகரத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, நந்தன் பெரியப்பா, சுமி பெரியம்மா, நிரோஷ் அண்ணா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஆயாக் கடவைப் பிள்ளையார் அருளோடும் அம்மன் துணையோடும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ம. சந்திரசேகரம்

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(69867)



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்

வழங்கும்

# மலிவு விற்பனை

- 4 ஜோயெற் No. 2 சாறிகள் – 1000/- மட்டுமே!
- 3 ஜோயெற் No. 1 சாறிகள் – 1000/- மட்டுமே!
- யப்பான் சூட்டிங் லெந் – 200/-
- சைனா துவாய் 160/-
- மாட்டின் சேட் பெரிது 200/-
- மாட்டின் சேட் சிறிது 160/-
- சேட் வகைகள் – 250/-
  [ கஸ்பர், இறேக், ஜொயின்ற் இன்னும் பல ]
- 1 மீற்றர் பட்டர் சில்க் பிறின்ரெட் – 75/-
- 1 மீற்றர் சேட்டிங் -- 70/-
- பூட்டு சாறம் -= 175/-
  (கலர், பன்சி, வெள்ளை)

கரொட்ஸ் T சேட் வகை குறித்த விலையில் இருந்து 50 ரூபா கழிவு

காஞ்சிபுரம் மணிப்புரி சாறி வகைகளும்

ஸ்கேட்அன் பிளெஸ் (F) புறொக் (M, S. L. ) வகைகளும்

மலிவு விலையில் இன்று முதல் விற்பனை செய்யப்படுகின்றன.

சொற்ப கையிருப்பு மட்டுமே உண்டு.

தேவைக்கு முந்துங்கள்

**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்**

18, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(சி/9320)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம்

## கைதடி சைவச் சிறுவர் இல்லம்

# சிறுவர் தினமும் கலை விழாவும்

இடம்:- சைவச் சிறுவர் இல்லம், கைதடி
காலம்:- 14- 10 99 வியாழன் பி. ப. 2 மணி
தலைவர்:- திரு. ஆ. மகாலிங்கம்
(உப-தலைவர், இந்து சமயப் பேரவை)

## நிகழ்ச்சி நிரல்

தலைமையுரை:-
வாழ்த்துரை:-
திரு. புண்ணியர் சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர் தென்மராட்சி)
சிறப்புரை:-
திரு சி. சக்திகிரீவன்
(கௌரவ செயலர், இந்து சமயப் பேரவை)
திரு. இ. குழந்தைவேலு
(தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்)
திருமதி க. துரைரத்தினம்
(அதிபர், அரச முதியோர் இல்லம்)
திரு. எஸ். செல்வராசா
(செயலாளர், ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்)
திரு. எஸ். சுப்பையா
(அறிவொளி மன்றம். நாவற்குழி)

கலை நிகழ்ச்சி:-
சிறுவர் இல்ல மாணவர்கள்
விசேட நிகழ்ச்சி:-
**வில்லிசை,**
(கலாபூஷணம் வில்லிசைப் புலவர்)
க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்கவி சீ. வினாசித்தம்பி — தலைவர்
சி. சக்திகிரீவன் — கௌரவ செயலாளர்

[69909]


## கௌரவிப்பு

சுழிபுரம், ஒக். 14

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள முதியவர்களைக் கௌரவிக்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் முதியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (க-28)

## தேவரதம் படகுச் சேவை

நெடுந்தீவு, ஒக். 14

ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவுக்கான காலை நேரப் படகுச் சேவை தற்சமயம் நடைபெற்று வருகிறது. காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்படும் தேவரதம் மோட்டார்ப்படகு பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் அனலை தீவில் இருந்து திரும்பி வரும்.

தேவரதம் எழுவை தீவிலும் தரித்துச் செல்கிறது. இதனால் அரச ஊழியர்கள் தமது கடமைகளுக்காக எழுவை தீவு அனலைதீவுப் பகுதிகளுக்குச் சென்று திரும்பக் கூடியதாக உள்ளது. [இ-111]


உ

யாழ்ப்பாணம் அருள்மிகு கோட்டை

# முனீஸ்வரன் தேவஸ்தானம்

(பதிவு இலக்கம் எச் ஏ / 5 / ஜேஏ / 706)

# ஆலயத் திருப்பணிச் சபை

4 – 10 – 99 திங்கள்

நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

தலைவர்: திரு. ம. ஞானசேகரம்
இணைச் செயலாளர்கள்: திரு. K. செந்தில்குமரன்
திரு. இரா. செல்வவடிவேல்
பொருளாளர்: இராமையா செட்டியார் முத்துலிங்கச் செட்டியார்

உறுப்பினர்கள்

1. திரு. S. தேவசேனாதிபதி
2. திரு. S. சற்குணலிங்கம்
3. திரு. S. குகநாதன்
4. திரு. N. பாலசுப்பிரமணியம்
5. திரு. M. வைத்திலிங்கம்
6. திரு, S. செல்வநாயகம்
7. திரு, ரா. முத்துக்நுமாரன்
8. திரு. M. S, இராசேந்திரன்
9. திருமதி த. பாலசிங்கம்
10. திரு. நவரட்ணம் நந்தசொருபன்
11. திந. கனகசபை சிவநேசன்

ம. ஞானசேகரம்
தலைவர்

(69903)



# நெஞ்சத்தை விட்டகலா ஆறாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **E. K. ஆறுமுகம்**

(முன்னாள் ஹோமகம, ஹற்றன், பருத்தித்துறை. வ. பி. போ. சபை பஸ் நடத்துநர்.)

மண்ணில் 07 – 09 – 1934
விண்ணில் 20 – 09 – 1993

திதி: பூர்வ பக்க பஞ்சமி: 14 – 10 – 1999

எண்ணமதில் நீங்காத எமதருமை ஐயாவே!
எங்களை விட்டேகி வருடம் ஆறாகின்றதே
கண்போல எமை வளர்த்து வாழவகை செய்து
வாழ்வித்தீர்.
உத்தமரே உம் நினைவால் அனுதினமும்
வாடுகின்றோம்.
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.
குடும்பத்தினர்.

புதுவீடு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

[69846]



வலிகாமம் கிழக்கு

# பிரதேச செயலக கலாசாரப் பேரவை

நடத்தும்

# முத்தமிழ் விழா - 1999

## முதலாம் நாள் நிகழ்ச்சி (15 - 10 - 99 வெள்ளி)

நேரம்: பிற்பகல் 1. 30 மணிமுதல் 7. 00 மணிவரை
இடம்: அச்சுவேலி மகா வித்தியாலயக் கலையரங்கு

1. 30 மணி — மங்கள விளக்கேற்றல் — சிவஸ்ரீ வை. விருத்தகிரீசக் குருக்கள்
1. 35 மணி — தேவாரம் — அச்சுவேலி மகா வித்தியாலய மாணவிகள்
1. 40 மணி — தமிழ்த்தாய் வாழ்த்து — இடைக்காடு மகாவித்தியாலய மாணவிகள்
1. 45 மணி — மங்கள இசை — இராமையாப்பிள்ளை குழுவினர் — ஆவரங்கால்
2. 30 மணி — வரவேற்புரை — திரு. இ. யோகராசா—கிராம அலுவலர்— அச்சுவேலி வ.
2. 40 மணி — தலைமையுரை — திரு. க. கேதீஸ்வரன் — பிரதேச செயலர் கோப்பாய்
2. 50 மணி — பிரதம விருந்தினருரை — திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் முகாமையாளர் மக்கள் வங்கி கன்னாதிட்டி
3. 05 மணி — சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் க, சின்னத்தம்பி விரிவுரையாளர், யாழ். பல்கலை.
திரு இ. சிவஞானசுந்தரம் உதவிக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்
திருமதி ச. கனகராசா அதிபர், அச்சுவேலி மகா வித்தியாலயம்
திரு, லயன் க. செல்வரத்தினம் சமாதான நீதிவான், அச்சுவேலி
திரு. எஸ் பேரின்பநாயகம் தலைவர், அச்சுவேலி ப. நோ. கூ. ச.
திரு, சி. கிருஷ்ணபிள்ளை சமாதான நீதிவான், ஆவரங்கால்
திரு வண. பசுபதி தேவராசா தென்னிந்தியத்திருச்சபை, அச்சுவேலி
3. 10 மணி — **நடனம்:** ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி புத்தூர்
3 20 மணி — **சிந்துநடைக்கூத்து:** 'காத்தவராயன்' அச்சுவேலி சரஸ்வதி வி. ம'
4. 00 மணி — **பட்டி மன்றம்:** திரு. க. நவரத்தினம் ஆசிரியர் குழுவினர் வடமராட்சி
பொருள்: **சினிமாப் பாடல்கள் தமிழர் பண்பாட்டுக் கோலங்களுக்கு ஊறு பயப்பன...?**
4. 45 மணி — சிறப்புச் சொற்பெருழிவு — ''வெள்ளைத்தாமரை'' கலாநிதி கவிஞர் இ. முருகையன் நீர்வேலி
5. 15 மணி — கர்நாடக இசைக் கச்சேரி —
இசைக்கலைமணி திருமதி கேமாவதி கணேசலிங்கம் ஆசிரியர் றேர. க. வித்தியாலயம்
பக்கவாத்தியம் — மிருதங்கம் —
மிருதங்க வித்துவான் கலாபூசணம், திரு. ப. சின்னராசா
வயலின் — திரு. அ. ஜெயராமன்
5. 45 மணி — **வசந்தன் கூத்து-** சிலன் குழுவினர் நீர்வேலி
6. 15 மணி — நன்றியுரை — செயலாளர் கலாசாரப் பேரவை கோப்பாய் செல்வி இ. மாலினி கலாசார உத்தியோகத்தர்
6. 20 மணி — **நாடகம்: ''சத்தியவான் சாவித்திரி''** கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள்

சுபம்.

**கலாசாரப் பேரவை**
வலி. கிழக்கு

(கி/9322)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவில் புதிய அரசு

இந்தியாவின் அடெல் பிஹாரி வாஜ்பாயின் தலைமையிலான அரசாங்கம் — அமைச்சரவை — நேற்றுப் பதவி ஏற்றது. வாஜ்பாய் அரசாங்கம் இதற்கு முன்னரும்பதின்மூன்று மாதங்கள் ஆட்சியில் இருந்தது. சுமார் 5 மாதங்கள் காபந்து அரசாக ஆட்சி செய்தது. ஆனால் ஈழத்தமிழர் பிரச்சினையில் அது பட்டும் படாமலே நடந்து கொண்டது. எதுவும் உருப்படியாகச் செய்யவில்லை.

அதனால் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வதற்கு வாஜ்பாயின் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பெரிதாக எதுவித உதவியையேனும் செய்யும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. முன்னரைப் போலவே தமிழர் தரப்புக்கு எதிராகச் செயற்படாது மென்மையாகச் செயற்படும்; 'நல்ல பிள்ளை'யாக நடந்து கொள்ளும் என்றே இங்கு வாழும் தமிழ் மக்கள் கருதுகிறார்கள் எனினும் காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏறினால்தமிழர் பிரச்சினையில் கடும் போக்கைக் கைக்கொள்ளும் என்பதும் அவர்கள் கருத்தாகும். வாஜ்பாய் அரசு நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிருக்கும் எனவும் நம்புகிறார்கள்.

இலங்கை இனப்பிரச்சினையில் முன்னர் தலையிட்டு இந்தியா தனக்குத் தானே அபகீர்த்தியைத் தேடிக்கொண்டது. ஆகையால் இனிமேலும் வாஜ்பாய் அரசு புத்திசாலித்தனமாகச் செயற்படவே விரும்பும் என்பது பலரின் கணிப்பு.

திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றககழகம் போன்ற தமிழகக் கட்சிகள் புதிய வாஜபாய் அரசில் இணைந்திருப்பினும் ஈழத்தமிழர் விவகாரத்தில் அரசு தனது கவனத்தை ஊன்றிச் செலுத்தும் எனக் கருத முடியாது. அத்தகைய நிலைக்குத்தமிழகக்கட்சிகள்வாஜ்பாயை உந்துமா என்பது சந்தேகமே.

இலங்கை இனபபிரச்சினையை வாஜ்பாய் அரசு உள்விவகாரமாகவே கருதியது; இனியும் — தொடர்ந்தும் — அந்த நிலைப்பாட்டையே கைக்கொள்ளும். கருணாநிதியின் தி.மு.க. புதிய அரசில் இப்போது சேர்ந்துள்ளதால் மேற்படி நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் செய்யப்படமாட்டாது.

ஈழத்தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்கவகை செய்யும் விதத்தில் இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுக்கக் கூடிய சக்தி அல்லது வல்லமை இந்திய அரசிடம் இருப்பினும் கூட அது எந்தளவிற்கு செல்லும் என்பதனைச் சொல்ல முடியாது.

இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் முடிவுகள் வரும் வரை இலங்கை அரசு அங்குள்ள நிலைமையை அதற்கென ஒருபிரிவை அமைத்து மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

வாஜ்பாய் அரசில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்கள் அங்கம் வகிப்பதால், அவர்கள் பக்கத்துக்கு இந்தியா சாயக் கூடிய வாய்ப்பு இருப்பதாக தென்னிலங்கையில் மிகைப்படுத்தி நோக்கப்படுகிறது. எனினும் இந்திய மத்திய அரசு தனித் தமிழீழம் ஒன்று உருவாகுவதை ஆதரிக்கமாட்டாது என்பதால் தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தினர், அவதானிகள் அது குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில், இந்தியாவின் புதிய (வாஜ்பாய்) அரசு ஈழத்தமிழர் பிரச்சினை குறித்துப் புதிய அணுகுமுறையை வகுக்குமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

---

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில்

# இவ்வாண்டுவேலைத்திட்டங்களில் பல இன்னும் பூர்த்தியாகவில்லை

யாழ்ப்பாணம, ஒக் 14

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 1999 ஆம் ஆண்டுக்கு யாழ். மாவட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கான வேலைகளில் பல இது வரையும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இத்திட்டத்தின் கீழ் 16 கோடியே 3 இலட்சத்து 63 ஆயிரத்து 500 ரூபா யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்கென ஒதுக்கப்பட்டது.

இந்த நிதியில் இம் மாதம் (ஒக்ரோபர்) வரையும் 6 கோடியே 92 ஆயிரத்து 607 ரூபாவுக்கான வேலைகள் மட்டுமே செய்யபபட்டுள்ளன.

மாவட்டச் செயலகம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைகளே முடிவடைந்துள்ளன.

பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், நல்லூர் போன்ற பிரதேச செயலங்களுக்கும் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, மருதங்கேணி, பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைகள் இது வரையும் பூர்த்தி செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் மாதத்துக்கு முன்னர் இத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் யாவும் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்று யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் உத்தரவிட்டுள்ளார். (ஐ-5)

# போலியோ சொட்டு மருந்துடன் பிறப்புப் பதிவுக் கணக்கெடுப்பும்

## யாழ் அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம். ஒக்.14

எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள போலியோ சொட்டுமருந்து வழங்கும் நிகழ்வுடன் பிறப்புப் பதிவுக் கணக்கெடுப்பும் நடைபெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

சொட்டுமருந்து வழங்கும் நிலையங்களில் வைத்தே இந்தக் கணக்கெடுப்பும் இடம் பெறும்.

பிரதேச செயலரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும். இந்தக் கணக்கெடுப்பின் போது கீழ்க் காணும் விவரங்கள் சேகரிக்கப்படும்.

★ சொட்டு மருந்து பெற வரும் ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் பற்றிய விவரங்கள்.

★ அந்தப்பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் பரிசிலனை செய்யப்படும்.

★ பிள்ளைகளின் பிறப்பு தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படாத விடத்து அதனைப் பதிவு செய்வதற்கான கடிதம் ஒன்று வழங்கப்படும்

எனவே பெற்றோர்கள் அனைவரும் சொட்டுமருந்து வழங்கும் இடத்துக்கு பிள்ளையின் பிறப்பு சம்பந்தமாக தங்கள் வசமுள்ள சான்றிதழையும் எடுத்துச் செல்லுமாறும்

பிறப்புச் சான்றிதழ் இல்லாவிடினும் சொட்டு மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் — அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ-ஈ-3)

---

துன்னாலை கோயிலில் திருடப்பட்ட

# நீர் இறைக்கும் இயந்திரம் சுழிபுரத்தில் மீட்கப்பட்டது

நெல்லியடி, ஒக். 14

துன்னாலைப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றிலிருந்து களவாடப்பட்ட நீரிறைக்கும்இயந்திரம் ஒன்று சுழிபுரம் பகுதியிலிருந்து பொலீஸாரினால் மீட்கப்பட்டது. இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

துன்னாலை அல்லையம்பதி சிவசுப்பிரமணியர் கோவிலிலேயே இந்தத் துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இரவு இடம் பெற்றது.

ஆலயத்திலிருந்து ஒலி பெருக்கி சாதனங்கள், நீரிறைக்கும் இயந்திரம் உட்பட சுமார் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆலய உடைமைகள் களவாடப்பட்டிருந்தன. இந்த ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்த சண்முகம் நேசராசு நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்திருந்தார்

இதேவேளை இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக்கூறப்படும் துன்னாலை கிழக்கைச் சேர்ந்த ஒருவரை (வயது 19) பருத்தித்துறை ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் மந்திகை சிலையடியில் வைத்து இம்மாதம் 3 ஆம் திகதி கைது செய்தார்.

இவரிடமிருந்து பெறப்பட்ட சில தகவல்களையடுத்து அன்று மாலை குறித்த சந்தேகநபர் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக, குறித்த சந்தேகநபர் நீரிறைக்கும் இயந்திரத்தை விற்பனை செய்த இடத்தினைத் தெரிவித்தார். நெல்லியடி பொலீஸார் மூளாய் சுழிபுரத்தில் மற்றும் ஒருவரைக கைது செய்து அவரிடமிருந்து அந்த நீரிறைக்கும் இயந்திரத்தையும் மீட்டனர்.

குறித்த இரு சந்தேகநபர்களும, கடந்த புதன்கிழமை நெல்லியடிப் பொலீஸாரினால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், முதலாவது சந்தேக நபரை இருவார காலம் விளக்கமறியலில் வைக்குமாறும்,

இரண்டாவது சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறும்— உத்தரவிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா, இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் இருவரைக் கைது செய்யுமாறு நெல்லியடிப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

[இ-109]

## ராமமூர்த்திக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஆர் ராமமூர்த்தியையும் அவரது உதவியாளரான சத்திபசீலனையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் உத்தரவிட்டார்.

நீர்கொழும்பில் உள்ள வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரைவிளக்க மறியலில்வைக்கும் படி உத்தரவிடப்பட்டது. (ஐ-3)

---

## நாளை

புரட்டாதி 28

வெள்ளிக்கிழமை

திதி: ஷஷ்டி

பின் இரவு 2. 53 வரை.

நட்சத்திரம்: கேட்டை

முற்பகல் 7.19 வரை

ஷஷ்டி விரதம்

ஜபநேரம்: 6.02—7.32

ராகுகாலம்: 10 32 – 12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரம்)

## உதயவாக்கு

ஆசையின் வேட்கையை அடக்கவும் முடியாது, தீர்த்து வைக்கவும் முடியாது. பேராசையைப் போக்க நினைத்தால், அதன் தாயாகிய படாடோபத்தை ஒழிக்க வேண்டும்.

விஸ்ரோ

---

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 14

இணுவில் [ஜே 115] கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கு அனுமதி பெற்றும் இதுவரை அந்தக் கொடுப்பனைப் பெற்றுக் கொள்ளாதவர்களை தம்முடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு அந்தப் பகுதி கிராம அலுவலர் கேட்டுள்ளார்.

(க)

## கப்பலில் தபால் பொதிகள்

கொக்குவில், ஒக். 14

யாழ். மாவட்டத்திற்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 103 தபால் பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல் மூலம் நேற்று யாழ். எடுத்துவரப்பட்டன.

தபால் பொதிகள் யாவும் உடனடியாகத் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுமென யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-69]

## வீதிகள் திருத்தப்படும்

வலி தென்மேற்கு, ஒக். 14

உலக வங்கியின்உதவியுடன் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள விவசாய வீதிகள் திருத்தப்படவுள்ளன.

(இ-185)

## மின் விநியோகம் சீரானது

உரும்பிராய், ஒக். 14

உரும்பிராயில் புதிய மின் மாற்றி பொருத்தப்பபட்டுள்ளது. இது 450 கேவி அலுவுள்ளதாகும்.

இதனைத் தொடர்ந்து உரும்பிராய்ப் பகுதிக்கான மின்சார விநியோகம்சீரடைந்துள்ளது.

[இ-154]

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 14

சித்தன்கேணி(சுப்றா)கல்வி நிறுவனத்தின் வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளன,

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக நுண் கலைப் பீடத் தலைவர் திருமதி நா. செல்வநாயகம் பிரதம விருந்தினராகவும். வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன். யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட விரிவுரையாளர் எஸ். சிவானந்தன், என். நடராசா, பிரம்மஸ்ரீ சபாரத்தின சர்மா, வாசுதேவ சர்மா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

[க]

---



## சாயி சிந்தனை

நல்ல குணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். தீயவர்களுடன் இணை சேர்ந்து தீமைக்கு இடம் தராதீர்கள். வாழ்க்கை என்னும் ரயில் பயணத்தில், இளைஞர்கள் எல்லாம் நீண்ட தூரப் பயணிகள். வயதில் மூத்தவர்கள் அடுத்த ஸ்டேஷனிலே கூட இறங்கி விடலாம். ஆனால் நீங்கள் சேர வேண்டிய இடம் வெகுதொலைவில் இருக்கிறது. முதலில் உங்களுக்குத் தேவையானது சுயநம்பிக்கை. இன்று தன்னம்பிக்கை இல்லாததால் தான் பலர் கஷ்டப்படுகிறார்கள். இறைவனின் மேல் முழு நம்பிக்கை இருந்தால் எத்தகையதொரு துன்பத்தையும் வெற்றி கொள்ள முடியும். உங்கள் பாதையில் சில இடையூறுகள் வரக்கூடும். அவற்றைக்கண்டு பதட்டப்படாதீர்கள். எத்தனை துயரம் வந்தாலும் அதனை மிகுந்த தைரியத்துடனும், திடத்துடனும் எதிர்கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்களுக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும்.

ஆதாரம்:- சனாதன சாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி கிடைத்தோரின் (செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச ரீதியாக வருமாறு:

(கரவெட்டித்தொடர்ச்சி)

[113619ஏ], [113619பி],
[113635ஏ], [113676ஏ],
[113677ஏ], [113683ஏ],
[113683பி], [113755ஏ[,
[113755பி], [113755சி],
[115089ஏ], [115089பி],
(115090ஏ), (115090பி),
(115111ஏ).
(115111பி], [115111சி],
(115125ஏ), (115211ஏ),
(115215ஏ), (115231ஏ),
(115231பி), [115231சி],
(115267ஏ), (115278ஏ],
[115299ஏ), (115299பி],
(115299சி), (115309ஏ),
(115316ஏ], [115316பி),
[115316 சி], (115317ஏ),
[115317 பி], [11517 சி],
[11541 ஏ[, [115346 ஏ[,
(115356 ஏ[, [115357 ஏ),
[115357 பி], [115357 சி],
[115357 டி[, [115421 ஏ[,
[115460 ஏ), [115488 ஏ],
(115543 ஏ[,

ஊர்காவற்றுறை

[10934ஏ], [10934பி],
[10934சி[, [11465ஏ],
[11465பி], [11465சி],
[11465டி], [11601ஏ[,
[11685ஏ], [11685பி[,
[11712ஏ], [11712பி],
[11712சி], [11712டி],
[11712ஈ], [11722ஏ[.
[11733ஏ], [11733பி],
[11764ஏ[, [11784ஏ],
(11737ஏ), [11801பி],
[11795ஏ], [11801ஏ],
[11801பி], [11810சி],
[11801ஏ], (11810பி),
(11810டி), (11811ஏ[,
(11812ஏ), (11817ஏ).
(11821ஏ), (11821பி),
(11821சி), (11821டி),
(11822ஏ), (11822பி),
(11823ஏ), (11824ஏ),
(11830ஏ), (11830பி),
(11830சி), (11830டி),
(11832ஏ), (11838ஏ),
(11838பி), (11848ஏ].
(11853பி], [11854ஏ],
[11857ஏ], [11857பி[,
[11857சி], [11857டி],
[11857ஈ], [11858ஏ[,
[11858பி], [11858சி],
[11859ஏ], [11864ஏ],
[11864பி], [11869ஏ],
[11870ஏ], [11870பி].
[11870சி[, [11875பி[,
[11876ஏ], [11876பி],
[11888ஏ[, [11892ஏ],
[11893ஏ], [11894ஏ],
[11895ஏ[, [11896ஏ],
[11904ஏ), [11904பி],
(11904சி), (11912ஏ),
(11924ஏ), [11924பி),
[11947ஏ[.

கோப்பாய்

[101800ஏ], [109572ஏ],
[109703ஏ], [109703பி],
[109703சி], [109770ஏ],
[109770பி], [109770சி],
[110012ஏ], [110128ஏ].
[110814ஏ], [110814பி],
[111012ஏ], [111065ஏ],
[111072ஏ],
[111072பி], [111076ஏ],
[111082ஏ], [111084ஏ],
[111084பி], [111088ஏ],
[111091ஏ], [111107ஏ],
[111108ஏ[, [111108பி],
[111112ஏ], [111122ஏ],
[111122பி], [111126ஏ],
[111126பி], [111127ஏ],
(111139ஏ), (111139பி),
(111143ஏ), (111143பி),
(111143சி), (111187ஏ),
(111187பி), (111194ஏ),
(116277ஏ), (116277பி),
(116280ஏ), (116327ஏ)
(116334ஏ), (116342ஏ),
(116408ஏ), (116408பி),
(116408சி), (116409ஏ).
(116420ஏ), (116476ஏ),
(116619ஏ), (116625ஏ),
(116627ஏ), (116640ஏ),
(116830ஏ),

மருதங்கேணி

(107904 ஏ), (113262ஏ),
(113271 ஏ), (113271பி).
(113445ஏ), (113446ஏ),
(113446பி), (085069ஏ),
(085070ஏ), (085070பி),
(085070சி). (085082ஏ)

நல்லூர்

(104242ஏ], (104334ஏ),
(104368ஏ), (104381ஏ),
(104399ஏ). (107655ஏ),
(107733ஏ), [107733பி],
(107762ஏ), [107762பி],
[107798ஏ], (107798பி),
[109811ஏ], (109814ஏ),
(109860ஏ].
[109977ஏ), (109983ஏ),
(109991ஏ), (110140ஏ),
[110140பி], [110245ஏ],
[110366ஏ], [116282ஏ],
[116351ஏ], (116351பி),
(116354ஏ), [116361ஏ],
[116362ஏ]. (116368ஏ),
[116370ஏ], [116371ஏ].
[116372ஏ[, [116379ஏ[,
[116379 பி], [116381 ஏ[,
[116381 பி[, [116381சி),
[116381 டி], [116381 ஈ[.
116389 ஏ[, [116389 பி],
[116400 ஏ], [116411 ஏ],
(116411 பி), (116416 ஏ).
(116416 பி), (116416 சி).
(116424ஏ), (117483 ஏ),
(117483 பி), (117483 சி),
(117483 டி), (117483 ஈ),
(117484 ஏ), (117491 ஏ),
(117492 ஏ), (117496 ஏ),
[117609 ஏ), (117610 ஏ),
(100672 ஏ), (100672 பி),
[100672 சி), (100672 டி),
(100672ஈ), (109672எவ்),
(107279ஏ), (107279பி),
(107279சி). (109276ஏ),
(112454ஏ), (112680ஏ),
(112680பி), (113925ஏ),
(113925பி), (113943ஏ),
(114131ஏ), (114131பி),
(114147ஏ), (114238ஏ),
(114248ஏ) (114263ஏ),
(114263பி), (114263சி),
(115794ஏ), (115794பி),
(115794சி), (115834ஏ),
(115842ஏ), (115842பி),
(115878ஏ), (115886ஏ),
(115886பி), (115902ஏ),
(115921ஏ). (115946ஏ),
[115946பி], [116028ஏ[,
[116033ஏ], [116033பி],
[116082ஏ], [116274ஏ],
[117782ஏ], [117782பி],
[076045ஏ], [106189சி],
[112939ஏ], [112939பி],
[113048ஏ[, [113064ஏ],
[114584ஏ], [114584பி],
[114605ஏ], [114711ஏ],
[114750ஏ], [114750பி],
[114750சி[, [114756பி],
[114769ஏ], [114769பி],
[114769சி], [114769டி],
[114769ஈ], [114769எவ்],
[114808ஏ], [114809ஏ],
[114830ஏ[, [114830பி],
[114831 ஏ], [114831பி],
[114831 சி [, [113831 டி],
[114849 ஏ], [114849 பி],
[114868 ஏ], [114873ஏ],
[114873 பி], (114873 சி),
[114887 ஏ], [114887 பி],
[114889 ஏ[, [114892ஏ],
[114954 ஏ], [117001 ஏ],
[117026 ஏ), [117041 ஏ],
[117142 ஏ], [117144 ஏ],
[117169 ஏ], [117226 ஏ],
[117301 ஏ], [117301 பி],

பளை

(107892ஏ], [107892பி),
[107900ஏ], [107900பி),
(107900சி), (107901ஏ],
[107901பி], (107902ஏ),
(107902பி), (107902சி),
(107902டி), (107905ஏ),
]107905பி], [107905சி],
[113257ஏ), [113257பி),
(113258ஏ), (113258பி),
(113258சி], [113258டி],
[113261ஏ], (113261பி),
[113263ஏ), (113264ஏ[,
(113264பி), [113267ஏ),
(113267பி), (113268ஏ],
(113269ஏ], [113273ஏ),
(113273பி].
(113274ஏ). (113274பி),
(113274சி), (113274 டி),
(113275ஏ), (116426ஏ),
(116427ஏ), (116427பி),
(116428ஏ), (116428பி),
(116429ஏ), (116430ஏ).
(116431ஏ), (116431 பி),
(116432ஏ), (116435ஏ),
(1164[illegible]5பி), (116439ஏ),
(116440ஏ), (116443ஏ).
(116443 பி), (085077ஏ),
(085078 ஏ), (085078பி).
(085078சி), (085079ஏ),

பருத்தித்துறை

(087714ஏ), (087714பி),
(087714சி), (087714டி),
(087714ஈ), (087714எவ்),
(093798ஏ), (098053ஏ),
(100756ஏ), (100755பி),
(100929ஏ), (101116ஏ),
(102774பி), (102774சி),
(102774டி), (102957ஏ),
(105335ஏ), (107929ஏ),
(107929பி), (108143ஏ),
(108152ஏ), (108170ஏ],
(108177ஏ). (108193ஏ),
(108193பி), [108198ஏ],
[108201ஏ), [108226ஏ],
[108229ஏ], [108229பி],
[108251ஏ[,
[108331ஏ], [108339ஏ],
[108342ஏ], [108345ஏ],
[108345பி], [108346ஏ],
[108346பி], [108351ஏ],
[108351பி], [108351சி],
[108351டி], [108351ஈ]
[111208ஏ], [111249ஏ],
[111249பி], [111287ஏ].
[111287பி], [111288ஏ],
[111296ஏ], [111296பி],
[111296சி], [111336ஏ],
[111357ஏ[. [111374ஏ],
[111395ஏ], [111419ஏ],
[111419பி], [111423ஏ],
[111427ஏ], [111427பி],
[111427சி], [111444ஏ],
(111454ஏ), (111454பி),
(111478ஏ), (111478பி),
111478சி), (111482ஏ),
(111501ஏ), (111501பி),
(111501சி), (111501டி),
(111502ஏ), (111506ஏ),
(111513ஏ), (111522ஏ),
(111522பி). (111574ஏ),
(111575ஏ).
(111575பி), (111598ஏ),
(111599ஏ), (111608ஏ),
(111608பி), (111611ஏ),
[111614ஏ[, [111617ஏ],
[111636ஏ], [111640ஏ],
[111657ஏ], (111657பி),
[111659ஏ], [111666ஏ],
[111666பி].
(111666சி), (111675ஏ),
(111675பி), (111675சி),
(111678ஏ), (111688ஏ),
(111688பி), (111688சி),
(111688டி), (111688ஈ),
(111689ஏ), (111696ஏ),
(111702ஏ), (111703ஏ),
(111704ஏ), (111704பி),
(111706ஏ), (113278ஏ),
(113278பி), (113278சி),
(113278டி), (113283ஏ),
(113292ஏ). (113301ஏ),
(113302ஏ), (113302பி),
(113302சி), (113307ஏ),
(113318ஏ), (113317ஏ),
(113318ஏ), (113320ஏ),

(தொடரும்)

# யாழ். பனஞ் சாராயத்துக்கு கொழும்பில் நல்ல கிராக்கி

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பனஞ் சாராயத்துக்கு கொழும்பில் நல்ல கிராக்கி இருந்து வருவதாகப் பனை அபிவிருத்திச் சபை அதிகாரி தெரிவித்தார்.

சங்கானை, திக்கம் வடி சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் 40 ஆயிரம் போத்தல் பனஞ்சாராயம் அண்மையில் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

கொழும்பில் பனஞ் சாராயத்தின் விற்பனை தாம் எதிர்பார்த்த அளவிலும் பார்க்க அமோகமாக நடைபெற்று வருவதாகவும்—

பனை அபிவிருத்திச் சபையால் தெஹிவளையில் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பனஞ்சாராய விற்பனை நிலையத்தில் மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை — தற்போது காணப்படும் சீரற்ற போக்குவரத்துக் [illegible] கொழும்பு வாடிக்கையாளரின் தேவைக்கு ஏற்ப பனஞ் சாராயத்தைத் தொடர்ச்சியாகக் கொழும்புக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் விற்பனை அதிகரித்து வருவதனால் இனி வரும் காலங்களில் மிதமிஞ்சி உற்பத்தியாகும் கள்ளை நிலத்தில் ஊற்றி அழிக்க வேண்டிய தேவை இல்லை என்றும் —

அவற்றை வடிசாலைகளில் பனஞ்சாராயமாக உற்பத்தி செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

[இ-5-9]

## 3 ஆம் வருட நினைவலைகள்



மலர்வு 06 — 04 — 1969

உதிர்வு 17 — 09 — 1996

செல்வி

**பரமேஸ்வரி தம்பையா (உஷா)**

(பொருளியற்றுறை இறுதியாண்டு மாணவி, யா/ பல்கலைக்கழகம்)

எங்கள் அன்புத் தெய்வம் அன்றாவே!
ஆண்டு மூன்று சென்றாலும் ஆறவில்லை
நம் துயர். மலரமுன்பே கருகி எம்மை
கண்ணீரில் கரைய வைத்த அன்றாவே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஸ்ரீ சாயி துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

ஜெகன், விஜி[illegible]

கோணாவளை லேன்,
கொக்குவில்.

[69913]

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபையின் 'செயலாளர்

**வேலாயுதபிள்ளை அருணந்தி**

அவர்கள் அகால மரணமானதையிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனை வேண்டுவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், ஊழியர்கள்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி/9340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## 15 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் மோதல்:

# யாழ். அணி ஒன்பது ஓட்டங்களால் மட்டு. அணியைத் தோற்கடித்தது

மட்டக்களப்பு, ஒக், 14

15 வயதுக்குட்பட்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி நேற்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற— தனது முதலாவது ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணியை 9 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் லவேந்திரா ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களையும் றொஹான் 30 ஓட்டங்களையும் கிறேட்சன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்..

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 176 ஓட்டங்களுக்குத் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யாழ் மாவட்ட அணியின் பந்து வீச்சில் லவேந்திரா, ரஜீவ்குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

வடக்கு. கிழக்கில் உள்ள மாவட்ட அணிகளுக்கு இடையில் மட்டக்களப்பில் நடைபெற்றுவரும் இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று திருகோணமலை அணியை எதிர்த்து வவுனியா அணி மோதவுள்ளது. (உ-4)

## மொஹாலி டெஸ்ட்

# மூன்று விக்கெட் இழப்புக்கு 505; வலுவான நிலையில் இந்திய அணி!

மொஹாலி, ஒக். 14

மொஹாலியில் நடைபெறும் இந்திய — நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் நான்காவது நாளான நேற்று இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 505 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

முதல் இன்னிங்ஸில் ஏற்பட்ட இழப்பை நிவர்த்தி செய்யும் முகமாக நேற்று தொடர்ந்து ஆடிய இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை முடித்துக் கொண்டபோது நியூஸிலாந்து அணியை விட 373 ஓட்டங்கள் முன்னணியில் இருந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் ராகுல் ட்ராவிட் 144, அணித் தலைவர் சச்சின் டென்டுல்கர் ஆட்டமிழக்காது 126, சடகோபன் ரமேஷ் 73, டெவன் காந்தி 75. உதவித் தலைவர் சௌரவ் கங்குலி ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களைக் குவித்தனர்.

பதிலுக்குத் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நேற்றைய ஆட்ட நேர இறுதியில் ஒரு விக்கெட்டை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இறுதி நாளான இன்றைய ஆட்டத்தில் 294 ஓட்டங்களை பெற்றால் தனக்கு வெற்றி என்ற நிலையில் நியூஸிலாந்து அணியும் அதற்கு முன் 9 நியூஸிலாந்து விக்கெட்டுக்களை கைப்பற்றினால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் இந்திய அணியும் களமிறங்க உள்ளன. (உ-4-8)

## கிரிக்கெட்

கல்விபங்காடு நொதேண் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் 12 பேர் பங்குபற்றும் 7 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென் பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய ஆட்டத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு வை.எவ்.ஸி. விளையாட்டுக் கழக அணி சீசொக்ஸ் அணியை எதிர்த்து விளையாடும். [உ-8]

## கொக்கோகோலா கிண்ணம்:

# மேற்கிந்திய அணியிடம் 'இலங்கை தோற்றது!

சார்ஜா, ஒக். 14

சார்ஜாவில் மூன்று நாடுகள் பங்குபற்றும் ''கொக்கோ கோலா'' கிண்ணத்திற்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கை அணியை 3 விக்கெட்டுக்களால் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் சனத் தமது அணி முதலில் துடுப்பாடப் போவதாக அறிவித்தார். ஆரம்ப ஆட்டத்தில் ஏற்பட்ட தளர்வாலும் மேற்கிந்திய தீவுகள் அணியின் சிறந்த பந்து வீச்சாலும் இலங்கை அணி 49.3 ஓவர்களில் 178 ஓட்டங்களுள் ஆட்டமிழந்தது.

தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக ஜிம்மிஅடம்ஸ் ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தார். ஆட்ட நாயகனாக அவரே தெரிவு செய்யப்பட்டார்.

இன்றைய ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தான் அணியை எதிர்த்து விளையாடும். [உ-8]

## உதைபந்தாட்ட போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றியவிவரம் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயா எதிர் சுழிபுரம் விக்ரோறியா.

**18 வயதுப் பிரிவு**

★ வசாவிளான் ம.ம.வி. எதிர் ஸ்கந்தவரோதயா.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ அராலி இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து.

**18 வயதுப் பிரிவு**

★ மானிப்பாய் இந்து எதிர் யூனியன் கல்லூரி.

★ அராலி இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து

★ ★ ★

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றன.

இன்றைய ஆட்டங்களில் 16, 18 வயதுப் பிரிவுகளில் யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் விளையாடவுள்ளது.

18 வயதுப் பிரிவின் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றும் இன்று அங்கு நடைபெறவுள்ளது. அந்த ஆட்டத்தில் நாவாந்துறை... கொக்குவில் இந்து அணிகள் விளையாடவுள்ளன. (உ-4)

# மைதானத்துக்குச் செல்ல ரசிகர்களுக்கு அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு. ஒக். 14

யாழ் மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் — மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் இடையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ரசிகர்கள் எவருக்கும் அனுமதியளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஆட்டம் ஆரம்பமாகிய வேளை வெபர் மைதானத்துக்குச் சென்ற நடுவர்கள், ஆட்டக்காரர்கள் மற்றும் விளையாட்டுத் துறை அதிகாரிகள் ஆகியோர் மட்டுமே மைதானத்துக்குள் பிரவேசிக்கப் படையினரால் அனுமதிக்கப்பட்டனர் எனவும்—

வெபர் மைதானத்துக்கு அருகில் உள்ள 3 ஆவதுபடையணியின் தலைமைக் காரியாலயத்தின் பாதுகாப்புக்கருதி ஏனையோர் மைதானத்துக்குள் பிரவேசிக்க படையினரால் அனுமதிக்கப்படவில்லை எனவும்—

மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதனால் மேற்படி ஆட்டத்தைப் பார்க்கச் சென்ற ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களும் விளையாட்டு ரசிகர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவகுமார்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுமார் காலமாகி விட்டார். அன்னார் கந்தையா—சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தனலெட்சுமியின் அன்புக் கணவரும் யதுர்ஷனாவின் அன்புத் தந்தையும் சபாரெத்தினம்—சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பவானிதேவி (ஆசிரியை), பாவினி (பிரான்ஸ்), கௌரி (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), நளாயினி (பிரான்ஸ்), ஜீவகுமார் (லண்டன்), இராஜ்குமார் (பிரான்ஸ்), சிவாஜினி, நிரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாபரநாதன் (H N T.), இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), தயாபரநாதன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), பரராஜசிங்கன் (பிரான்ஸ்), சகிலா (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-10-99) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. கந்தையா
(தந்தை)

பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

(69946)

திருமதி

## சின்னத்துரை பார்வதிப்பிள்ளை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்துரை பார்வதிப்பிள்ளை கொழும்பில் 11-10-99 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி மருதப்பு சின்னக்குட்டியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஐயம்பிள்ளை பொன்னாச்சியின் அன்பு மருமகளும் இரத்தினசோதி (கொழும்பு), ஞானசோதி (கொழும்பு), யோகம்மா (ஆசிரியை, யாழ்ப்பாணம்), பொன்னம்மா (கொழும்பு), கனகம்மா (கனடா), முருகானந்தவேல் (குமாரவேல் கொம்பனி, கொழும்பு), செல்வராணி (லண்டன்), கிருபானந்தவேல் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவரெட்ணம் (கொழும்பு), மெய்கண்டமூர்த்தி (ஹொலண்ட்), இராஜரெட்ணம் (இளைப்பாறிய தபால் அதிபர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இரட்ணசிங்கம், சரவணபவானந்தன் (கனடா), கமலாதேவி (கொழும்பு), மகாலிங்கம் (லண்டன்), தேவிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவானந்தி, சதானந்தி, சிவகாந்தன், சிவசுரதன், சிவதீபன், இளமதி, இளங்கீரன், சுமதி, சிவசெந்தில், சிவசுதன், ராஜினி, தயாழினி, சிறிராஜயோகன், நளாயினி, சுபாஜினி, சிறிராஜமோகன், சிவகணேஸ், சிவகோபி, சிவசக்தியன், சிவரமணன், துவாரகா, நர்மதா, சிறிரங்கன், செந்தூரன், வித்தியா, கார்த்திகா, ஆதித்தியா, மேகலன், காயத்திரி, வேணுகா, அருண் ஆகியோரின் பேர்த்தியும் வைஷ்ணவி, அபிராமன், அபிநயா, சுவஷ்திகா, சாமந்தி ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, தங்கமுத்து, சுப்பிரமணியம், செல்லத்தம்பி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மாதுங்கர், கனகசபாபதி சிவக்கொழுந்து (கனடா), பரமேஸ்வரி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வைரமுத்து, சுந்தரம்பிள்ளை, செல்லமுத்து, செங்கமலம், சின்னத்தங்கம், சின்னாச்சி, குழந்தைவேலு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்..

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காகப் பொரளை ஜெயரட்ண மலர்சசாலையில் வைக்கப்பட்டுத் தகனக் கிரியைகளுக்காக இன்று (14-10-99) வியாழக்கிழமை மாலை 4 மணிக்குப் பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. முருகானந்தவேல்
(மகன்)

24/6, கல்பொத்த வீதி,
கொழும்பு -11.
தொலைபேசி: 459147

(சி/9350)

# கண்ணீர் அஞ்சலி

எமது சகோதர நிறுவனமான
த.குவேந்திரராசா (T. K)
வர்த்தக நிறுவனத்தில் கடமையாற்றிய
கந்தையா சிவகுமார் [சிவா]

அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மதுரா மாளிகை,
221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(69948)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றியின் அதிரடி மலிவு விற்பனை

குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்த

**விற்றுத்தீர்த்தல்**

இன்றே முந்துங்கள்! முந்துங்கள்!

**சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்**

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9992)



**ROYAL**

**Electronic Electrical**

Main Street. Point Pedro.

**T.V** –

Sony 21", 46" Sony Projector T V

**V.C.R** –

SR 30, SR 38, SR 50, SD 235, ED 10

**Audio CD Set** –

Sony 1500 w, Panasonic 1000 w

**Casset Recorder** –

Sony, Panasonic Single & Double Door

**Antenna** –

VHF, UHF, Euromind, Disc Antenna - 6',8'

**Speaker** 8", 10", 12"

Audio Vedio CD Player, Audio CD.
Vedio CD, Audio - Vedio Cassete.
CD Cleaner, Audio Deck (Denon, Technics),
Stereo Amp, Box Item, Blender, Toster,
Iron Box, Fan, Ahuja Amp Item,
110 – 220 Transformer, Blender Wheel,
Typewriter, அலுவலக உபயோக சுழல் கதிரை.
Audio CD Remind, ஒன் (பெரியது)
அத்துடன் T.V. Deck, Radio உதிரிப்பாகங்களும்
எலக்ரிக்கல், எலக்ரோனிக் உதிரிப்பாகங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

(69900)



**CIMA STAGE II**

**ஆரம்பம்:**

**23 - 10 - 1999**

**B. Com. MANAGEMENT**

பட்டதாரிகள் சேரவும்

**STAGE I க்கு**

எம்மிடம் பதிவு செய்த
**51** யாழ். பல்கலைக்கழக
மாணவ, மாணவிகள் தாமதமின்றிச்
சேரவும்

**A. A. T., I. A. B.**

**வகுப்புக்கள் 01 - 01 - 2000**

ஆரம்பமாகும்.

**தமிழ், ஆங்கிலம்**

ஆகிய இரு மொழிகளிலும் விரிவுரைகள் நடைபெறும்.

**S.I.A.S.**

358, கோவில் வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

(69906)


## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 14

உடுவில், கோட்ட மட்டக் கல்விக் கண்காட்சி இன்று காலை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நடைபெற்ற கல்விக் கண்காட்சிகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்கள் கோட்டமட்ட கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன.

அதே சமயம் —

வலிகாமம் வலய மட்ட கல்விக் கண்காட்சி எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.45 மணிக்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-6)

### துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்)

தமது வீட்டுக்கு அருகில் உள்ள மயிலணிவடலி அம்மன் ஆலயத்திற்கு தனது வாகனத்தில் சென்று, வாகனத்தில் கைத்துப்பாக்கியை வைத்து விட்டுச் சென்ற போதே வாகனத்தில் இருந்து அத்துப்பாக்கி எடுத்துச் செல்லப்பட்டதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ5-86)


எமது நேற்றைய
வீடியோ CD
வெளியீடு!

ரகுமான் – விஜயசாந்தி
விஜயகுமார் நடித்த

சூர்யோதயம்
(பிரமிட்)

No. 1 போலீஸ்

**I. T. N. VIDEO**

கோயில் வீதி,
கொக்குவில்.

T. P. 3123 (69927)



INSTITUTE OF INFORMATICS STUDIES
IIS Jaffna, Sri Lanka

**COMPUTER COURSES**

உயர்கல்வி கற்கும், கற்கத் தயாராகும் மாணவர்களுக்கான விசேட கணனி வகுப்புக்கள் மிகக்குறைந்த கட்டணத்துடன் ஆரம்பிக்கப்பட உள்ளன.

**ஆரம்பம்: 14-10-99**
**(பகல் 10.00 மணி)**

| பயிற்சி நெறி | கட்டணம் |
|---|---|
| MS Excel 2000 | 1900-00 |
| MS Word 2000 | 1900-00 |
| MS Access 2000 | 1900-00 |
| Pascal | 2400-00 |
| dBase III+ | 1900-00 |

★ இக் கட்டணச் சலுகை இப் பிரிவுகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

★ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வெளிமாவட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ வார நாள், வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

DIRECTOR,
IIS,
Jaffna.

(சி/9282)


# கண்ணி அகற்றும் பணி வலி. வடக்கில் ஆரம்பம்

அளவெட்டி, ஒக். 14

வலி. வடக்குப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அளவெட்டி அருணோதயா கல்லூரிச் சுற்றாடலில் புதையுண்டுள்ள கண்ணி மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணியே முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிம்பாப்வே நிபுணர் குழுவினர் இப்பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் வரை இடம்பெற்ற பணிகளின் போது பல கண்ணி மற்றும் மிதிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டு அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அருணோதயாக் கல்லூரிச் சுற்றாடலில் அமைந்துள்ள கைவிடப்பட்ட காவலரண் பகுதியில் மிக நீண்ட தூரத்துக்கு கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இவற்றை அங்கிருந்து முற்றாக அகற்றுவதற்கு சில நாள்கள் செல்லலாம் என தெரியவருகிறது.

அதே சமயம் —

வலி, வடக்கு பிரதேசத்தில் உள்ள அளவெட்டி, சீனன்கலட்டி, ஞானோதயா வித்தியாசாலை, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் முன்பாக உள்ள காவலரண் பகுதிகளிலும் பெருமளவு கண்ணி மற்றும் மிதி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-6-13)

## வெள்ளைப் பிரம்பு தினவிழா

தென்மராட்சி, ஒக் 14

சர்வதேச விழிப்புலனற்றோர் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள வெள்ளைப் பிரம்பு தினவிழா நாளை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தை மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் க. சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ கலந்து கொள்வார். விழிப்புலனற்றோரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (உ-117)

### தமிழீழம்...

(முதலாம் பக்கத் தொடர்)

குறிப்பாகத் தமிழரிடம் — அனுதாபத்தையும் ஆதரவையும் இழக்க அந்த வன்முறைகள் காரணமாக அமைந்துவிட்டதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

"இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் கடந்து அவர்களுக்குத் தனி ஈழம் கிடைக்குமேயானால் நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம்." —

இவ்வாறு கலைஞர் மேலும் கூறினார். (உ-6)

### இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் —

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாகவே இருபது இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-7-21)

### 25 அமைச்சர்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் வாஜ்பாய் தவிர, அமைச்சரவை அந்தஸ்துள்ள ஏனைய 25 அமைச்சர்களின் பெயர் விவரம் வருமாறு:

எல். கே. அத்வானி, அனந்த்குமார், ஜக்மோகன், டாக்டர் சத்தியநாராயணன், ராம் ஜெத்மலானி, டாக்டர் முரளி மனோகர் ஜோஸி, பிரமோத் மகாஜன், சுந்தர்லால் பட்வா, ராம் நாயக், ஜோல் ஓரம், காஷிராம் ராணா, சாந்தாகுமார், ஜஸ்வந்த சின்ஹா, ஜஸ்வந்த் சிங், ரங்கராஜன், குமாரமங்கலம் (அனைவரும் பாரதீய ஜனதா) —

மனோகர் ஜோஷி, சுரேஷ் பிரபு (இருவரும் சிவசேனா) —

முரசொலிமாறன், ரி. ஆர். பாலு இருவரும் தி.மு.க.) —

மம்தா பனர்ஜி (திரணமுல் காங்கிரஸ்) —

ஜோர்ஜ் பெர்னாண்டஸ், நித்திஸ்குமார், ராம் விலாஸ் பாஸ்வான், சரத் யாதவ் (நால்வரும் ஐக்கிய ஜனதா தள்) —

நவீன் பட்நாயக் (பிஜு ஜனதா தள்) —

தனி அமைச்சு ஒதுக்கப்பட்டுள்ள ஏழு இணை அமைச்சர்களும் வருமாறு;-

மேனகா காந்தி (சுயேச்சை) அருண் ஜெயிட்லீ, எம். கண்ணப்பன், டிலிப் ராய், வசுந்தராராஜி, என்.ரி.சண்முகம், உமாபாரதி.

அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சுகள் பற்றிய விவரம் இன்று அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையணித் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வவுனியா, கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு, மன்னார் அரசாங்க அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை கடந்தநான்கு தினங்களாகத் தடைப்பட்டிருந்த வன்னிப் பகுதிக்கான போக்குவரத்து இன்று மீண்டும் ஆரம்பமாகும் என வவுனியாமாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (உ-7)

### லக்ஸபான...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்புக்கும் வேறு சிலமுக்கிய இடங்களுக்கும் மின் விநியோகம் உடன் வழங்கப்பட்டது.

லக்ஷசபான நீர் மின் உற்பத்தி நிலைய நீர்த் தேக்கப் பகுதிகளில் நீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் மின் பிறப்பாக்கிகளில் கோளாறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே மின் விநியோகம் இடையில் நிறுத்தப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-6)

### வேட்டுக்களால்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊர்காவல் படையினருக்கு பயிற்சி அளிக்கும் வகையிலேயே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக வவுனியா படைத்தரப்பில் பின்னர் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

### பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணித்துள்ளன.

அந்த நாட்டில் மீண்டும் ஜனநாயக ஆட்சி மலர சர்வதேச நாடுகள் உதவவேண்டும் என்றும் அவைகோரியுள்ளன.

அதேநேரம் — பாகிஸ்தான் நிலைவரம் தொடர்பாக உன்னிப்பாகக்கவனிப்பதாகவும் —

அது தொடர்பாக உடன் கருத்துக்கூற முடியாதுள்ளது என்றும் —

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

(மேலும் செய்திகள் 3 ஆம் பக்கத்தில்)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org